# 2.1 உலகின் ஒளியாக வந்த இயேசு



தினமும் காலையில் சூரியன் வெண்ணொளி வீசி வானில் தோன்றுகிறது; இருள் அகன்று ஒளி பிறக்கிறது. புத்துணர்வு, புதுப்பெலன், புது நம்பிக்கை அளிக்கும் வண்ணம் ஓர் புதிய நாள் பிறக்கிறது. இவற்றை வாழ்வளிக்கும் கடவுள் தினமும் நமக்குத் தருகிறார்.

உலகின் படைப்பின் முதற்கட்டத்திலேயே இறைவன் புவிமீது படர்ந்து கிடக்கும் இருளை அகற்றுவதற்கென 'ஒளிதோன்றுக' என்றார். ஒளி தோன்றியபோது 'கடவுள் ஒளி நல்லது' எனக் கண்டார். இந்த ஒளியே அனைத்து உயிர்களும் உயிர் வாழ்வதற்கு அடிப்படை ஆதாரமாகி அதற்கு உரிய ஆற்றலை வழங்குகிறது. எனினும் மனித வாழ்வு ஊனுடல் தாண்டி இறைத்தன்மை கொண்டது. எனவே இவ் இயற்கையொளியைக் கொண்டு மட்டும் மாந்தர் நிறைவாழ்வு வாழமுடியாது. ஆகவே, உலகில் ஒளியை உருவாக்கிய கடவுள், மனித உள்ளங்களிலேயேயும் ஒளியேற்றுவதற்காக தமது குமாரன் இயேசுவை நம் மத்தியில் அனுப்பினார். 'அவரே அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி' (யோவான் 1:9)

யோவான் நற்செய்தி நூலினை ஆக்கியோன், தொடக்க நூலின் ஆரம்பத்தில் படைப்பின் நிகழ்வில் உள்ளதை நினைவு கூர்ந்து, அதே ஆக்கத்திறன் கொண்ட 'இறைவாக்குடன்' ஆரம்பிக்கிறார். தம் 'வாக்கினால்' உலகைப் படைத்த கடவுள், தன்னுள் மெய்வாழ்வையும், மெய்யான ஒளியையும் கொண்டிருக்கின்றார் என்கிறார்.



> அவரிடம் வாழ்வு இருந்தது
> அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது.
> (யோவான் 1:4)

இந்த உண்மையின் முக்கியத்துவத்தை மக்களுக்கு எடுத்துரைப்பதற்கென்றே ஆண்டவர் இயேசு பிறந்தார் என யோவான் நூலின் ஆசிரியர் நம்பியதால், இயேசுவின் பிறப்பு நிகழ்வு தொடர்பான வேறு விபரங்களை தமது நூலில் சேர்க்கவில்லை. இயேசுவின் பிறப்பினால் மனிதருக்கு வழங்கப்படும் மெய்யான ஒளியைக் குறித்த எண்ணங்களை மட்டும் யோவான் தம் நூலின் மூலம் நமக்குத் தருகிறார்.



இலவச விநியோகத்திற்காக

## கிறிஸ்து என்னும் ஒளி

ஒளியைப் பற்றிய கிறிஸ்தவ செய்தி இயேசுவை மையமாகக் கொண்டுள்ளது. அவரே வாழ்வு தரும் கடவுளாக இருப்பதோடு, அந்த வாழ்வுக்கு ஒளிதரும் கடவுளாகவும் இருக்கிறார்.

## கடவுள் தரும் ஒளி

**பழைய ஏற்பாட்டில்** *ஆண்டவரே என் ஒளி; அவரே என் மீட்பு* என்று திருப்பாடல் ஆக்கியோன் கூறுகிறார். (திருப்பாடல் 27:1)

இந்த ஒளியை உடையவர் ஆண்டவர். அவர் இந்த ஒளியை அணிந்துள்ளார். ஆண்டவரின் ஒளியை **பேரொளி** என்று வர்ணிக்கும் திருப்பாடலாளர், *'ஆண்டவர் 'பேரொளியை ஆடையென அணிந்துள்ளார்'* என்றும் குறிப்பிடுகின்றார் (திருப்பாடல்கள் 104:2)

இஸ்ரயேலின் ஒளியானவர் தூய்மையின் அடையாளமாகவும் வர்ணிக்கப்படுகின்றார். அவர், முட்புதர்களைப் போன்ற தீச் செயல்களைச் சுட்டெரிப்பவர் என்கிறார்.



> இஸ்ரயேலின் ஒளியானவர் நெருப்பாக
> மாறுவார்; அதன் தூயவர் தீக்
> கொழுந்தாய் உருவெடுப்பார். (எசாயா 10:17)

**புதிய ஏற்பாட்டில்**

இயேசு தாமே இவ்வுலகின் ஒளியாய் இருக்கின்றார். தம்மைப்பற்றி சான்று பகிர்கின்றார். எருசலேம் திருக்கோவிலில் இயேசு மக்களைப் பார்த்து



> உலகின் ஒளி நானே; என்னைப்
> பின்தொடர்கின்றவர் இருளில் நடக்கமாட்டார்;
> வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக்
> கொண்டிருப்பார். (யோவான் 8:12)

இருள் சூழ்ந்த உலகில் ஒளியாக இயேசு வந்தார் . இதன் மூலம் அவர் மக்களுக்குப் புது நம்பிக்கையையும் துயருருவோருக்கு ஆறுதலையும், பிணியாளருக்கு சுகத்தையும் ஒடுக்கப்பட்டோருக்கு விடுதலையையும் கொடுத்தார்.



ஆண்டவர் இயேசு பிறந்த நாட்களில் யூத மக்கள் அரசியல் , சமுதாய, சமய கலாசார ஒடுக்குமுறைகளை அனுபவித்து வந்தனர். மக்களுக்கு முழுமையான விடுதலையைக் கொடுப்பதற்காகவே ஆண்டவர் மக்கள் மத்தியில் ஒளியாக வந்துதித்தார். எசாயா இறைவாக்கினர் முன்னுரைத்தமை இவ்வாறு நிறைவேறியது என யோவான் நூல் ஆசிரியர் இயம்புகிறார்.

*'காரிருளில் இருந்த மக்கள்* ***பேரொளியைக்*** *கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடரொளி உதித்தது'*

(மத்தேயு 4:16)

சாவின் நிழலென வர்ணிக்கப்படும் இவ்விருள், படைப்பின் ஆண்டவருக்குக் கீழ்ப்படியாமல் போனதிலிருந்து மனுக்குலத்தைக் கௌவிப்பிடிக்க ஆரம்பித்தது. மனுக்குலம் வீழ்ந்துபோன காலத்திலிருந்தே தங்களுக்கு நிறைவாழ்வு தரும் பேரொளியை நாடி நிற்கின்றார்கள். அவ்வொளி இறைவாக்கினரிடமிருந்து இன்று நாம் பெற்றுக் கொள்ளும் **ஆன்மீக உள்ளொளியாக** இருக்கிறது. பாவம் நிறைந்த உலகின் பங்குதாரர்களாகிய நாமும் அப்பாவக் கட்டுகளிலிருந்து விடுபடுவதற்கு இயேசுவாகிய ஒளியை நாடிச் செல்ல வேண்டியோராய் உள்ளோம். ஆண்டவர் இயேசு: 'ஒளி உங்களோடு இருக்கும்போதே ஒளியை ஏற்றுக் கொள்ளுங்கள்'. என்று அழைக்கிறார்.



அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது;
இருள் அதன்மேல் வெற்றி கொள்ளவில்லை.
யோவான் 1:5



இலவச விநியோகத்திற்காக



இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போருக்கு ஒளிதரவும் நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும் ..... விடியல் நம்மைத் தேடி வருகிறது.

(லூக்கா 1:78, 79)

யூதர் நடுவில் இயேசு ஒளியாகத் தோன்றியிருப்பினும் அவர் **அனைத்து உலகின் ஒளியாகவே** வந்தார். அவர் முழு உலகின் ஆண்டவராயிருக்கிறார். முழு உலகிற்கான மீட்பின் திட்டத்தை அவர் யூதரின் மத்தியில் ஆரம்பித்து, முழு உலகிற்கும் எடுத்துச் செல்கிறார்.



தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும்பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவிற்கு கடவுள் உலகின் மீது அன்பு கூர்ந்தார்.

(யோவான் 3:16)


மேற்கண்டவாறு இயேசு கூறியதன் மூலம் அவரில் நம்பிக்கை வைக்கும் அனைத்து மக்களுக்கும் நிலைவாழ்வு உரித்தாகின்றது என்பது தெளிவு.

இந்த இறைத் திட்டத்தைப் பற்றியே, திருச்சட்டத்தின்படி குழந்தை இயேசு திருக்கோயிலில் அர்ப்பணிப்புச் செய்யப்படுவதற்குக் கொண்டுவரப்பட்டபோது, அங்கு அவருக்காகக் காத்திருந்த **சிமியோன்** என்பவர் கீழ்காணும் விதத்தில் கூறினார்:

*'இம் மீட்பே பிற இனத்தவருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி ; இதுவே உம்மக்களாகிய இஸ்ரயேலுக்குப் பெருமை' (லூக்கா 2:32).*

அவர் கீதமாக போற்றிப் பாடிய மேற்காணும் வசனம் எசாயா முன்னுரைத்த இறைவாக்கு என்பதை கவனத்திற் கொள்வது சிறப்பு.

## ஒளியின் ஆண்டவர் பிறஇனத்தவருக்கு ஒளி கொடுக்கும் நிகழ்வுகள்

1.  

**இப்பகுதியை வாசித்து வெற்றிடங்களை நிரப்புக.**

2. மாற்கு நற்செய்தி 7:24-30

இயேசு சென்ற ஊரின் பெயர் ........................................................................

இயேசுவைச் சந்தித்த பெண் பேசிய மொழி .......................................

அப்பெண்ணின் இனம் ........................................................................

அவரின் வேண்டுதல் ........................................................................

இயேசுவின் உள்ளத்தைத் தொடும்படி அவர் கூறிய பற்றுறுதி மிக்க வார்த்தைகள்

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

3. யோவான் நற்செய்தி 4:1-18

இயேசு சென்ற ஊர் :........................................................................
அங்கிருந்த கிணற்றின் பெயர் : ........................................................
யூதர்கள் சமாரியரோடு : ..................................................................
இயேசு அவளிடம் கேட்டது : ........................................................
அவள் இயேசுவுக்கு அளித்த பதில் : ...................................................

4. உலகின் ஒளி ...............................
எனவே 'ஆண்டவரே என் .........................'

(திருப்பாடல் 27:1)

## செயல்பாடு

1. **உலகின் ஒளி நானே** என்ற தலைப்பில் ஒரு சுவரொட்டி தயாரிக்கவும்.
2. நாம் வாழும் இருள்சூழ்ந்த சமுதாயத்தின் மத்தியில் ஒளியாகத் திகழும் வண்ணம் இறைவழிகாட்டலை வேண்டி ஓர் செபம் எழுதுக.



இலவச விநியோகத்திற்காக